## தரம் 11

# தமிழ் மொழியும் இலக்கியமும்





## அலகு


## இலக்கணம்

## மாற்றொலி

Mr M.Selvathas MA in Tamil
NP/J/Thevaraiyali Hindu College,Karaveddy.

# எழுத்துக்களின் ஒலிப்பு முறை – மாற்றொலி





ள ண
ற
ர
ல ந ன
இயல்பான நாக்கு
ழ

# மாற்றொலி

## நுழைவாயில்

ஓர் எழுத்து வெவ்வேறு எழுத்துக்களுடன் சேர்ந்து சொற்களில் வரும்போது நுட்பமான ஒலிவேறுபாட்டைக் கொண்டமைகின்றது. அவ்வாறு வெவ்வேறு ஒலிகளைக் கொண்டு அமைவதை மாற்றொலி என்பர்.

வல்லின மெய்கள் ஆறும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிப்புடையனவாக அமைகின்றன.

க்
- கயல்,பக்கம்
- சங்கம்,சிங்கம்
- மகன்,வாழ்க

ச்
- சலனம்,பாசம்
- பஞ்சு,மஞ்சு
- மச்சம்,பயிற்சி

## பல்தேர்வு வினாக்கள்

மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

### “க” மாற்றொலியாக அமையும் சந்தர்ப்பம்

- கப்பல்
- தங்கம்
- கடல்
- கத்தி

# தகரம் வல்லினமாக ஒலிக்காத சொல்

- தயிர்
- பத்து
- பித்தன்
- செய்தேன்

# பகரம் வல்லினமாக ஒலிக்கும் சொல்

நம்பு

வெம்பல்

அப்பா

நம்பி

ககரம் எந்தச்சொல்லில் 'h' என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கிறது

கடல்

மேகம்

தங்கம்

கதவு

# இரண்டு உயிர்களுக்கிடையில் ‘க’ கர ஒலி இடம்பெறும் சொல்

கடல்

பாகம்

கண்

கதவு

**முற்பகுதியில் இருக்கின்ற சொற்களுக்கு நிகரான ஒலிப்புடைய சொற்களை இனங்கண்டு இணைக்குக.**

| | |
|---|---|
| 1.கடல் | 1.தம்பி |
| 2.தங்கம் | 2.பத்து |
| 3.முகம் | 3.மறம் |
| 4.கயல் | 4.வாசம் |
| 5.பஞ்சு | 5.பந்தம் |
| 6.முத்து | 6.கப்பல் |
| 7.சந்தம் | 7.வேகம் |
| 8.பாசம் | 8.கனி |
| 9.நம்பி | 9.பங்கம் |
| 10.அறம் | 10.மஞ்சு |

## சுருக்கமான விடை எழுதுக

1. மாற்றொலி என்றால் என்ன ?

   சொற்கள் அமைவிடம் நோக்கி வேறுபட்டொலிப்பது மாற்றொலி எனப்படும்

2. மெய்யெழுத்துக்களில் மாற்றொலிகளாக ஒலிக்கும் எழுத்துக்கள் எவை ?

   வல்லின எழுத்துக்கள்
   க்,ச்,ட்,த்,ப்,ற்

3. ஆங்கில k எழுத்து ஒலிப்புக்கு நிகராக ஒலிக்கும் ககர ஒலிப்புடைய சொற்கள் இரண்டு தருக ?

   கயல்,கனி

4. ஆங்கில g எழுத்து ஒலிப்புக்கு நிகராக ஒலிக்கும் க ஒலிப்புடைய சொற்கள் இரண்டு தருக ?

சிங்கம்,சங்கம்

5. ஆங்கில h எழுத்து ஒலிப்புக்கு நிகராக ஒலிக்கும் ககர ஒலிப்புடைய சொற்கள் இரண்டு தருக ?

நகம்,மகன்



## பின்வரும் சொற்களை ஒலிப்பு வேறுபாடுகளுக்கு ஏற்ப பகுத்து எழுதுக

க – அகல்,பங்கம்,கத்தி,கதவு,சிங்கம்,மகன்

| | | |
|---|---|---|
| கத்தி | சிங்கம் | அகல் |
| கதவு | பங்கம் | மகன் |

ச – சபை,அச்சம்,பஞ்சு,பாசம்,பயிற்சி,மஞ்சு

| | | |
|---|---|---|
| சபை | பஞ்சு | அச்சம் |
| பாசம் | மஞ்சு | பயிற்சி |

ட – வடம்,இடம்,அண்டம்,பட்டம்,தண்டம்,சட்டம்

| | | |
|---|---|---|
| வடம் | அண்டம் | பட்டம் |
| இடம் | தண்டம் | சட்டம் |

த – தம்பி,சந்தம்,வேதம்,தந்தை,மதம்,பந்தம்

தம்பி சந்தம் வேதம்

தந்தை பந்தம் மதம்

ப – பந்து,நம்பி,சாபம்,தும்பி,பட்டு,கோபம்

பந்து நம்பி சாபம்

பட்டு தும்பி கோபம்

ற – அறம்,பற்று,பறவை,வெற்றி

அறம் பற்று

பறவை வெற்றி

மாற்றொலியை மையமாகக் கொண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் இடம்பெறுகின்ற வினாக்கள்

**வினா வகை I**
**பல்தேர்வு வினாக்கள்**

1. பின்வரும் சொற்களில் 'க' என்ற எழுத்து ஒலிப்பில் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

   1. மேகம் 2. தேகம் 3. கப்பல் 4.சுகம்

2.இரண்டு உயிர்களுக்கிடையில் தகர ஒலி இடம்பெறும் சொல்


1. பத்து 2. சந்தம் 3. வேதம் 4. வாழ்தல்



**வினா வகை II**
**குறுவினாக்கள்**

1. ஆங்கில h எழுத்து ஒலிப்புக்கு நிகராக ஒலிக்கும் ககர ஒலிப்புடைய சொற்கள் இரண்டு தருக ?

**நகம்,மகன்**





நன்றி